முருகப்பெருமான் துணை

**மகான் பிடிநாகீசர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.08.2023**, புதன்கிழமை

1. ஞானபலம் கொண்டு உலகில்
ஞானிகளை படைப்பேனென
ஞானபண்டிதன் வரமாக வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது நள்ளி திங்கள்
வரங்களென மூவைபீர் திகதி புந்தி வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 17 ம் நாள், 02.08.2023, புதன்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை பிடிநாகீசரும் தருவேன்
அரங்கன் அவதாரபலம் கூடிட
வாசி வென்ற ஞானப்படைகள்
வையகமெல்லாம் உருவாக அருளுகின்ற
4. அருளுகின்ற அரங்கன் தருமம்
அகிலமதில் மாற்றம் நிகழ்த்தும்
அருளுகின்ற அரங்கன் மார்க்கம்
அனைவரையும் ஞானிகள் ஆக்கும்
5. ஆக்கமுடன் தரும வேலிகட்டி
அருளமுதாக தன் சக்திதனை
தேக்கமின்றி வழங்கி வரும்
தேசிகன் வழி தனி வழி
6. வழிகள்தனை வழிமொழிந்து
வரவேற்று முருகா என
அழியாமை பாதை தா என
அனுகூலம் பெற வேண்டிவர

7. வேண்டிவர தன்வினைகள்
விரைந்து விலகி ஓடும்
தொண்டனாக்கித் தொடரவே
தொய்விலா முழு சரணாகதியாகும்
8. ஆகவே வாழ்வில் அடுத்தடுத்து
அற்புதம் அரங்கனால் கண்டு
வகையான ஞானவான் எனும்
வளர்ச்சிநிலை கண்டடைந்து
9. அடைந்துமே உலகினில் மாற்றம்
அறிவிப்பேன் ஞானிகள் வெளிப்பட
தடையற ஞான ஆட்சிக் காலம்
தருமபலத்தால் கனியக் கூடும்
10. கூடாத கொடும் பாவிகள்
கொள்கையென சாதி வெறி
ஈடேற்றி வாழும் தலைமைகள்
எல்லாம் அழிந்து ஒழிந்துமே மாற்றம்
11. மாற்றம் ஞானத்தலைமையாக
மக்களை ஒரே தலைமைகீழ்
ஆற்றல்பட அகத்தியர் குலமாக்கி
ஆறுமுகனார் ஆசிபட வழிநடத்தல் காணும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—